<u>சேலம் மாநகராட்சி</u>

**2023ஆம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி புதன்கிழமை காலை 11.45 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் மாநகராட்சி சட்டம் அட்டவணை 1, பத்தி 3(2)ன் கீழ் சேலம் மாநகராட்சியின் அவசரக்கூட்டம் நடைபெறும்.**

---

<u>பொருள்கள்</u>

**1)** சேலம் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பகுதி அடிப்படையிலான அபிவிருத்தி பகுதியாகிய (ஏபிடி) அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் 32ல் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையம் அருகில் பழுதடைந்துள்ள பெரியார் வணிகவாளகத்தினை இடித்து அப்புறப்படுத்தி மறுசீரமைப்பு செய்திடும் பணியினை மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு ரூ.18.77 கோடிக்கு, சேலம் ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் நிறுவனத்தின் 18.10.2018 அன்று நடைபெற்ற நிர்வாக குழு கூட்டத்தில் அனுமதி மற்றும், சேலம் மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் எண் 25477/2017/டிஓ1 நாள் 01.07.2019ல் ரூ.18.10 கோடிக்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணியினை நிறைவேற்ற 06.08.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பபந்ததாரர் திருவாளர் எஸ்ஆர்எம். கன்ஸ்டிரக்சன் நிறுவனத்தின் விலைகுறைப்பிற்கு பிந்தைய தொகை ரூ.13,87,69,231/—ஐ மன்றத்தின் முன் அனுமதியுடன் 16.12.2019ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பெற்றுள்ளது.

தொடர்ச்சி..

மேற்படி பொரியார் பேரங்காடி வளாகமானது சேலம் நகர பேருந்து நிலையம் மற்றும் பஜார் தெருவினை ஒட்டி பழைய நகரின் மையப்பகுதியில் உள்ளதால் இக்கட்டிடத்தில் அமைய உள்ள அனைத்து வணிக கடைகளுக்கும் பொது மக்கள் சென்று வரக்கூடிய முக்கிய வளாகபகுதியாக உள்ளதால் வணிக நோக்கில் ஆண்டுதோறும் இந்த பெரியார் பேரங்காடி வளாகத்தின் மூலம் பெருந்தொகையை மாநகராட்சிக்கு ஈட்டி தர வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தளத்திலும் பெரிய வணிக நிறுவனங்கள் , வங்கி அலுவலகங்கள் , கார்பரேட் நிறுவனங்கள் வாடகைக்கு வந்திடும் வண்ணம் மாநகராட்சி ஆணையாளர், மாநகர பொறியாளர் மற்றும் நகர முக்கிய பிரமுகர்கள் தள ஆய்வின் போது ஆலோசித்து தற்போதைய கட்டிடங்களில் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு தேவையான கூடுதல் வசதி பணிகளை சேர்த்து செய்திட அறிவுறுத்தப்பட்டது. ( குளிர்சாதனம், தீத்தடுப்பு, காவலர் அறை, மின்விளக்கு , உள்அலங்கார கூறைகள் (False Ceiling ), லிப்ட் வசதி திறந்த வெளிபகுதியில் கான்கிரீட் சாலை போன்ற வசதி பணிகள்)

மேற்கண்டுள்ளவாறு அசல் மதிப்பீட்டில் உள்ள இனங்களுடன் சேர்த்து மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத புதிய இனங்கள் சேர்த்து செய்வதால் தேவைபடும் இனங்கள், அளவுகள் மற்றும் இதற்கு ஆகும் செலவினம் கீழ்கண்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

பெரியார் வணிகவாளகத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டிய அவசியம் மற்றும் அவசரம் கருதி அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள பிற இனங்கள் தள அமைப்பின்படி செயல்படுத்தும் அளவுகளின் காரணமாக ஏற்படும் சேமிப்புத் தொகையிலிருந்தும், மதிப்பீட்டில் வகை செய்யப்படாத புதிய இனங்கள் செந்தாரபட்டியல் விலை விகிதத்தில் மேற்கொள்ளவும், செந்தார பட்டியலில் இல்லாத சில இனங்களுக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று அதில் குறைந்த விலைப்புள்ளி தொகையில் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கவும், இப்பணியினை செய்து வரும் ஒப்பந்ததாரர் திருவாளர் எஸ்ஆர்எம். கன்ஸ்டிரக்சன் நிறுவனத்தின் மூலமாகவே பணியினை மொத்த தொகை ரூ. **19,90,85,512/–ல்** நிறைவேற்றி முடிக்க மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கு அனுமதியும், அசல் மதிப்பீட்டில் இல்லாத கூடுதல் இனங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள ( Data ) டேட்டா மற்றும் பணிதாளை (work Slip) தலைமை பொறியாளர். சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி ஒப்புதல் பெற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி அசல் மதிப்பீட்டில் இல்லாத அவசியமான கூடுதல் அளவுகள் , இனங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள டேட்டாவிற்கும், பணித்தாளிற்கும் (work Slip) தலைமை பொறியாளர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி உரிய ஒப்புதல் பெற்றிட மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிகக்கைகளை அனுமதிக்கலாம்.

3) கூடுதல் செலவினம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் பணித்தாளில் குறிப்பிட்டுள்ள தொகையில் நிறைவேற்றி முடிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

**(SSCL/16 /2019-20/A.C)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2, 3அனுமதிக்கப்பட்டது.

**2)** சேலம் மாநகராட்சி சீர் மிகு திட்டத்தின் கீழ் கோட்டம் **25**ல் உள்ள சூரமங்கலம் வார்டு அலுவலகம் பள்ளப்பட்டி ஏரி புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். Roc No.2228/2020/IHSDP-3-1 நாள்: **07.02.2020**ன்படி மதிப்பீடு தொகை ரூ.**14.75** கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முதன்மை தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறைக்கடிதம் Roc No.2953/2020/DO1, நாள்: **14.02.2020** அன்று மதிப்பீட்டு தொகை ரூ.**12.80** கோடிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

அதன்அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டு, திரு. கே.பி. ரங்கராஜு, சங்ககிரி, சேலம் என்பவருக்கு ஒப்பந்த தொகை ரூ.**11,23,39,775/–** (without GST) 20.07.2020ஆம் தேதியில் பணி உத்திரவு வழங்கி **12** மாத காலத்தில் நிறைவேற்றி முடித்திட ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

தற்போது பணிகள் செய்யும் போது கீழ்க்கண்ட இனங்களில் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட அளவினை விட அதிகமாக செய்யப்பட்டுள்ளது.

1) இரும்பு கம்பி அமைத்து வேலி அமைக்கும்பணி.
2) தெருவிளக்குகள் கூடுதலாக **130** எண்ணிக்கை அமைக்கும்பணி.
3) குழாய் பதிப்பதற்கு நெடுஞ்சாலை துறைக்கு தொகை செலுத்தல்
4) பள்ளப்பட்டி கிழக்கு பகுதியில் அமைந்துள்ள தூண்களில் Granite அமைக்கும் பணி

மேற்கண்ட இனங்களில் கூடுதலாக வருகின்ற காரணத்தினால் கூடுதல் செலவினம் ரூ.**1.94** கோடி மேற்கொள்ள வேண்டியஅவசியம் ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட கூடுதல் செலவினத் தொகை ஏற்கனவே நிர்வாக அனுமதியில் வழங்கப்பட்ட தொகை ரூ.**14.75** கோடியில் ஈடு செய்து பணிகள் முடிக்க வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

1) அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி அசல் மதிப்பீட்டில் இல்லாத அவசியமான கூடுதல் அளவுகள் இனங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள டேட்டாவிற்கும், பணித்தாளிற்கும் (work Slip) தலைமை பொறியாளர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி உரிய ஒப்புதல் பெற்றிட மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளை அனுமதிக்கலாம்.
3) மேற்காணும் கூடுதல் செலவினத்தை அனுமதி வழங்கப்பட்ட நிர்வாக அனுமதிக்குள் செலவிட அனுமதிக்கலாம்.

**(SSCL / 1401/2020)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு **1, 2, 3**அனுமதிக்கப்பட்டது.

**3)** சேலம் மாநகராட்சி சீர் மிகு திட்டத்தின் கீழ் நேரு கலையரங்கம் மறு சீரமைப்பு செய்யும் பணியினை மேற்கொள்ள ரூ.**35.92** கோடியில் தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டு, பணியினை M/S. SRM Construction, Erode என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த தொகை ரூ.28,80,57,620/-க்கு **26.05.2020**ஆம் தேதியில் பணி உத்திரவு வழங்கி **24** மாத காலத்தில் நிறைவேற்றி முடித்திட ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மேற்கண்ட பணிகள் செய்யும்போது மண்ணின் திறன் மாறியுள்ள காரணத்தினால் அதற்குகேற்ப மறு வடிவமைப்பு அண்ணா பல்கலைக்கழகம், திண்டுக்கல் அவர்களிடமிருந்து பெறப்பட்டு பணிகள் அதற்கேற்ப நடை பெற்று வருகின்றன. மேலும் மேற்கண்ட கட்டிடத்தில் Basement மற்றும் Ground floor உயரத்தை மாற்றி அமைக்கப்பட்டு அதற்கு கேற்ப பணிகள் மறுவடிவமைப்பு பெறப்பட்டது. மேலும் தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் உள்ள P.T Slap உரிய Centering மற்றும் Design அளவுகள் மதிப்பீட்டை விட கூடுதலாகவும் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் மதிப்பீட்டில் மேற்கண்ட இனங்களுக்கு தோராயமாக Provision கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இனங்கள் அனைத்தும் மதிப்பீட்டை விட கூடுதலாக செய்து பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதனால் கூடுதல் செலவினம் ரூ.**3.3**கோடி தேவைப்படுகிறது.

மேற்காணும் பணிகளை குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிக்கப்படவேண்டிய அவசியம் மற்றும் அவசரம் கருதி அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள பிற இனங்கள் தள அமைப்பின்படி செயல்படுத்தும் அளவுகளின் காரணமாக ஏற்படும் சேமிப்புத் தொகையிலிருந்தும், மதிப்பீட்டில் வகை செய்யப்படாத புதிய இனங்கள் உட்புகுத்தவும், மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களின் கூடுதல் அளவுகள் மற்றும் புதிய இனங்களை செந்தாரபட்டியல் விலை விகிதத்தில் மேற்கொள்ளவும், செந்தார பட்டியலில் இல்லாத சில இனங்களுக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று அதில் குறைந்த விலைப்புள்ளி தொகையில் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கவும், இப்பணியினை செய்து வரும் ஒப்பந்ததாரர் M/S. SRM Construction, Erode என்ற நிறுவனத்தின் மூலமாகவே பணியினை மேற்கொள்ளவும், மேற்கண்டுள்ள கூடுதல் இனங்களை உட்புகுத்தி, அதற்கான கூடுதல் செலவினம் ரூ.**3.3**கோடியில் பணியினை செய்து முடிக்க மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கு அனுமதியும், அசல் மதிப்பீட்டில் இல்லாத கூடுதல் இனங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள ( Data ) டேட்டா மற்றும் பணிதாளை (work Slip) தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி ஒப்புதல் பெற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1) அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி அசல் மதிப்பீட்டில் இல்லாத அவசியமான கூடுதல் அளவுகள் இனங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள டேட்டாவிற்கும், பணித்தாளிற்கும் (work Slip) தலைமை பொறியாளர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி உரிய ஒப்புதல் பெற்றிட மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிகக்கைகளை அனுமதிக்கலாம்.
3) மேற்காணும் கூடுதல் செலவினத்தை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நிர்வாக அனுமதி தொகையிலிருந்து செலவிட அனுமதிக்கலாம்.

**(SSCL / 13266 /2019)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2, 3அனுமதிக்கப்பட்டது.

**4)** **2022–2023**ம் ஆண்டு உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் ( I & A) நிதியின் கீழ் சேலம் மாநகராட்சியின் சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள போடிநாயக்கன்பட்டி ஏரி புனரமைப்பு மற்றும் அழகுபடுத்தும் பணி ரூ.**19.00** கோடி (வரிகள் உட்பட), மதிப்பீட்டில் மேற்கொள்ள **12.05.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

போடிநாயக்கன்பட்டி ஏரியில் புனரமைப்பு மற்றும் அழகுபடுத்தும் பணிக்கு **12.05.2023** அன்று கீழ்கண்ட விபரப்படி நான்கு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | வைப்புத்தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|
| 1. | M/s. Sakthi Engineering Contractors, Karur. | State Bank of India<br>D.D.No.510021,<br>Rs.19,00,000/-, Date: 11.04.2023 |
| 2. | K.P.Rangaraju, Salem. | Union Bank of India<br>Deposit Account No.511403030045484,<br>Rs.19,00,000/-, Date: 11.05.2023 |
| 3. | M/s. KTR & Co., Erode | Stat State Bank of India<br>Deposit Account No.41909231839<br>Rs.19,00,000/-, Date: 11.05.2023 |
| 4. | M.s. Win Sudharsan Constructions, Salem. | -- |

**12.05.2023** அன்று தொழில்நுட்ப கூர்ந்தாய்வு குழு அறிக்கையின் படி மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.**3**ல் கண்டுள்ள M/s. KTR & Co., Erode நிறுவனத்தினர் தொழில்நுட்ப தகுதி பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வரிசை எண்.**4**ல் கண்டுள்ள M.s. Win Sudharsan Constructions, Salem நிறுவனத்தினர் அசல் வைப்புத்தொகை செலுத்தவில்லை எனவே தொழில்நுட்ப தகுதி பெறவில்லை.

எனவே தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ள நிறுவனத்தினரின் விலைக்குறித்த ஒப்பந்தப்புள்ளிகள் **30.05.2023**ம் தேதியில் திறக்கப்பட்டு அசல் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

தொடர்ச்சி..

| வ. எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.) | விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1. | M/s. Sakthi Engineering Contractors, Karur. | ரூ.14,25,95,278.00 | 0.12%குறைவு |
| 2. | K.P.Rangaraju, Salem. | ரூ.14,26,76,899.00 | 0.06%குறைவு |

மேற்காணும் விபரப்படி ஒப்பந்தப் புள்ளியை M/s. Sakthi Engineering Contractors, Karur என்ற (L1) நிறுவனத்தார் குறைந்தபட்ச ஒப்பந்தப் புள்ளியாக கொடுத்துள்ளார்.

எனவே, இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண். E2/1218/2022–23, நாள்: 30.05.2023ன்படி மேற்படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் M/s. Sakthi Engineering Contractors, Karur அவர்களிடம் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தினை மேலும் குறைத்து கொடுக்க இயலுமா (Negotiation) என்பதை எழுத்துப் பூர்வமாக தெரிவிக்க கோரி மேற்படி ஒப்பந்தக்காரருக்கு கடிதம் வழங்கப்பட்டது. இக்கடிதம் தொடர்பாக (L1) நிறுவனத்தார் M/s. Sakthi Engineering Contractors, Karur அவர்களின் கடிதம் நாள்: 30.05.2023ல் 2023–24ம் ஆண்டு அரசு விலைபட்டியல் வரப்பெற்றுள்ளதால் ஏற்கனவே வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை விட விலைக்குறைப்பு செய்து வழங்க இயலாது என கடிதம் வழங்கியுள்ளார்.

எனவே, மேற்காணும் விகிதம் படி L1 ஒப்பந்ததாரர் M/s. Sakthi Engineering Contractors, Karur அவர்களின் குறைந்த விலைப்புள்ளி GST நீங்கலாக ரூ.14,25,95,278/–னை (ரூபாய் பதினான்கு கோடியே இருபத்தைந்து இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரத்து இருநூற்றி எழுபத்து எட்டு மட்டும்) ஏற்றுக்கொள்ளலாம்.

மேற்கண்டுள்ள **போடிநாயக்கன்பட்டி ஏரி** (ரூ.14,25,95,278/–) புனரமைப்பு மற்றும் அழகுபடுத்தும் பணிக்கு M/s. Sakthi Engineering Contractors, Karur என்ற ஒப்பந்ததாரருக்கு பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

அனுமதிக்கலாம்.

**(இ2/1218 / 2022–23)**
தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**5)** **2022–2023ம் ஆண்டு உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் ( I & A) நிதியின் கீழ் சேலம் மாநகராட்சியின் அம்மாபேட்டை மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அல்லிக்குட்டை ஏரி புனரமைப்பு மற்றும் அழகுபடுத்தும் பணி ரூ.10.00 கோடி (வரிகள் உட்பட), மதிப்பீட்டில் மேற்கொள்ள 12.05.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.**

**அல்லிக்குட்டை ஏரியில் புனரமைப்பு மற்றும் அழகுபடுத்தும் பணிக்கு 12.05.2023 அன்று கீழ்கண்ட விபரப்படி இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது.**

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | வைப்புத்தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|
| 1. | D.Kamaraj, Salem. | Bank of India<br>FDR Account No.800845110005015<br>Rs.10,00,000/-, Date: 19.04.2023 |
| 2. | Phoenix & Co., Salem. | Indian Bank,<br>Deposit Receipt No.0133511, Rs.23,00,000/-, Date: 11.05.2023 |

அதனடிப்படையில் 12.05.2023ம் தேதிய தொழில் நுட்ப அறிக்கையின்படி தகுதியான ஒப்பந்ததாரரின் விலைக்குறித்த ஒப்பந்தப்புள்ளிகள் 29.05.2023ம் தேதியில் திறக்கப்பட்டு அசல் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.) | விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1. | D.Kamaraj, Salem. | ரூ.8,16,13,582.00 | 0.03%அதிகம் |
| 2. | Phoenix & Co., Salem. | ரூ.8,94,40,442.00 | 9.62%அதிகம் |

மேற்காணும் விபரப்படி ஒப்பந்தப் புள்ளியை D.Kamaraj, Salem என்ற (L1) நிறுவனத்தார் குறைந்தபட்ச ஒப்பந்தப் புள்ளியாக கொடுத்துள்ளார்.

எனவே, இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண். E2/1217/2022–23, நாள்: 29.05.2023ன்படி மேற்படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் D.Kamaraj, Salem அவர்களிடம் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தினை குறைத்து கொடுக்க இயலுமா (Negotiation) என்பதை எழுத்துப் பூர்வமாக தெரிவிக்க கோரி மேற்படி ஒப்பந்தக்காரருக்கு கடிதம் வழங்கப்பட்டது. இக்கடிதம் தொடர்பாக (L1) நிறுவனத்தார் D.Kamaraj, Salem அவர்களின் கடிதம் நாள்: 30.05.2023ல் ஏற்கனவே வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை விட விலைக்குறைப்பு செய்து வழங்கியுள்ளார். அதன் விபரம் பின்வருமாறு.

தொடர்ச்சி..

| வ.எண் | விலை விகிதம் குறைப்பு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்ட நாள் | ஒப்பந்தப்புள்ளியில் வழங்கப்பட்ட விலை விகிதம் ரூ. | ஒப்பந்தாரரின் விலை விகிதம் குறைப்பு கடிதம் நாள் | விலை குறைப்பு கடிதத்திற்கு பின் விலை குறைப்பு செய்த தொகை ரூ. | விலை குறைப்பிற்கு பின் வழங்கப்பட்ட விலைவிகிதம் ரூ. | விலை விகிதம் % |
|---|---|---|---|---|---|---|
| 1 | 29.05.2023 | ரூ.8,16,13,582/– | 30.05.2023 | 49,500/– | 8,15,64,082/– | 0.03%குறைவு |

எனவே, மேற்காணும் விலைக் குறைப்பின்படி L1 ஒப்பந்ததாரர் D.Kamaraj, Salem அவர்களின் விலைக்குறைப்பிற்கு பிறகு வழங்கிய தொகை GST நீங்கலாக ரூ.**8,15,64,082/–**னை (ரூபாய் எட்டு கோடியே பதினைந்து இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து என்பத்து இரண்டு மட்டும்) ஏற்றுக்கொள்ளலாம்.

மேற்கண்டுள்ள **அல்லிக்குட்டை ஏரி (ரூ.8,15,64,082/–)** புனரமைப்பு மற்றும் அழகுபடுத்தும் பணிக்கு D.Kamaraj, Salem என்ற ஒப்பந்ததாரருக்கு பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அனுமதிக்கலாம்.

**(இ2/1217 / 2022–23 )**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**6)** சேலம் மாநகராட்சி சீர் மிகு திட்டத்தின் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் **25–**ற்குட்பட்ட பள்ளப்பட்டி ஏரிக்கு செல்லும் நீரில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்காக கால்வாய் திசை திருப்பிக் கொண்டு செல்லும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். No.2228/2020/IHSDP-3 நாள்: **07.02.2020**ன்படி மதிப்பீடு தொகை ரூ.**14.50** கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முதன்மை தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறைக்கடிதம் Roc No.2951/2020/DO1, நாள்: **14.02.2020** அன்று மதிப்பீட்டு தொகை ரூ.**12.50** கோடிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

அதன்அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டு, ஒப்பந்ததாரர் M/s. Myan's Infracstrutures, Erode அவர்களுக்கு ஒப்பந்த தொகை ரூ.**10,13,57,072/–** (without GST) **22.07.2020**ஆம் தேதியில் பணி உத்திரவு வழங்கி 12 மாத காலத்தில் நிறைவேற்றி முடித்திட ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மேற்கண்ட பணிகள் நடைபெற்று வரும்போது கீழ்கண்ட இனங்கள் மதிப்பீட்டு அளவைவிட கூடுதலாக செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதன்அடிப்படையில் கீழ்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றது.

1) பள்ளப்பட்டி வடக்கு பகுதி புதியதாக நுழைவாயில் அமைக்கும் பணி
2) நுழைவாயில் அருகாமையில் வடிகால் அமைக்கும் பணி
3) பள்ளப்பட்டி வடக்கு பகுதியில் இருந்து ஏரிக்கு செல்லும் வரை சாலை அமைக்கும் பணி
4) பள்ளப்பட்டி ஏரிக்கும் Inlet and outlet பகுதியில் இரண்டு புதிய சிறுபாலம் அமைக்கும் பணி.

மேற்கண்ட இனங்களில் கூடுதலாக வருகின்ற காரணத்தினால் கூடுதல் செலவினம் ரூ.**1.07** கோடி மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட கூடுதல் செலவினத் தொகை ஏற்கனவே நிர்வாக அனுமதியில் வழங்கப்பட்ட தொகை ரூ.**14.50** கோடியில் ஈடு செய்து பணிகள் முடிக்க வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1) அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி அசல் மதிப்பீட்டில் இல்லாத அவசியமான கூடுதல் அளவுகள் இனங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள டேட்டாவிற்கும், பணித்தாளிற்கும் (work Slip) தலைமை பொறியாளர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி உரிய ஒப்புதல் பெற்றிட மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளை அனுமதிக்கலாம்.
3) மேற்காணும் கூடுதல் செலவினத்தை அனுமதி வழங்கப்பட்ட நிர்வாக அனுமதிக்குள் செலவிட அனுமதிக்கலாம்.

**(SSCL / 1403/2020)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2, 3அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
31–05–2023.